RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s913

# பெருங்கதை குடும்ப அமைப்பில் விழுமியப்பண்புகள்

அ. ராஜமரகதம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, வி.எம்.எஸ்.பி. நாடார் கல்வியியல் கல்லூரி, விருதுநகர்-626001, தமிழ்நாடு, இந்தியா.

# Values in 'Perunkathai' Family System

A. Rajamaragatham [a, *]

[a] Department of Tamil, V.M.S.P. Nadar College of Education, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: arajamaragatham76@gmail.com

Received : 18-07-2021
Revised : 27-05-2022
Accepted : 11-06-2022
Published : 28-07-2022

Check for updates

**ABSTRACT**

In the world of Tamil poetry, Perunkathai is held in equal esteem with the five great epics. The original text of Perunkathai was written by Gunadithiyar in the Paisasam language, a vernacular dialect of Prakrit, in the name of Pragatatha. After that, it was written in Sanskrit under the name Prigathkathai by a Ganga king named Durvineethan in the fifth or sixth century AD. Konguvelir wrote it in Tamil under the name of Udhayanan Kathai. He is considered to belong to the Velalar class of Kongu Country. This book, which was written in the seventh century AD by Konguvelir, is also known as Udhayanan Kathai, Konguvel Maakathai, and Perunkathai. This epic poem is composed by focusing on the lives of the kings. The grammar, literature, and epics of the Tamil language are all written with the aim of making the readers refined and virtuous. The aim of this book is that man should live a long time with perfect human nature. A family is a system in which one has children and lives together. This system undergoes many changes from time to time. Family structure is determined based on occupation, job, preference, need, etc. They classify family systems as joint family systems where grandfather, grandmother, paternal aunt, maternal uncle, elder paternal uncle, elder maternal aunt, younger maternal aunt, younger paternal father, grandson, granddaughter, etc., live together and classify them as single family systems where mother, father, and child live together. No matter what the system is, the family system will gain specialness and value only if it accepts the personal feelings, desires, needs, obligations, and duties of each individual. Many changes occur in human characteristics according to the living conditions of the changing and growing living conditions of people. The purpose of this article is to highlight the family values that are mentioned in the story in order to properly refine these changes and make us live in a good way.

**Keywords:** Perunkathai, Konguvelir, Tamil Epic, Family Values

## முன்னுரை

சமுதாயத்தின் அங்கமாய்த் திகழும் மனிதர்கள் குடும்ப அமைப்பில் தம்மை எவ்வாறு வெளிப்படுத்திக் கொள்கின்றனர் என்பதை அவர்களது பங்கேற்பின் விளைவால் ஏற்படும் மாற்றங்களைப் பொருத்து குடும்பத்தின் விழுமியப் பண்புகள் அமையும்.

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் திருமணம் எனும் பந்தத்தில் இணையும் போது குடும்பம் என்னும் அமைப்பு உருவாகின்றது. ஆண் பெண் என்னும் இரு நிலைகளில் அவர்களுக்குள் ஏற்படும் அக உறவு குடும்பத்தையும் புற உறவு குடும்ப அமைப்பின் வளர்ச்சிக்கும் காரணமாக அமைகின்றன.

குடும்ப வாழ்வியல் முறைகளில் காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் நிகழ்வுகள் கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதை காப்பியத்தில் பல்வேறு இடங்களில் இடம் பெற்றுள்ளன. பெருங்கதை காப்பியத்தின் வழிகுடும்ப அமைப்பில் தமிழ்ச்சமூகம் காலம் காலமாகப் பின்பற்றிய குடும்ப விழுமியப் பண்புகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது. இதன்மூலம் நாம் நம் முன்னோர்களின் குடும்ப விழுமியச் செய்திகளை அறிந்து பின்பற்ற ஏதுவாக அமையும்.

## களவு வாழ்க்கை

அகத்தில் தொடங்கும் தமிழ் மக்களின் வாழ்வினை இலக்கியங்கள் களவு கற்பு என்னும் இரு பெரும் பிரிவுகளாக வகுத்து காட்டுகின்றன. ஒத்த பண்புடைய ஆடவனும் பெண்ணும் ஓர் இடத்தில் சந்தித்துக் கொள்ளும்போது அக வாழ்க்கை தொடங்குகிறது. சந்திப்பு இயல்பானதாகவும் 'ஆகூழ் 'காரணமாகவும் அமையலாம் என்பதை,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்

ஒன்றி உயர்ந்த பால தாணையின்

ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப

மிக்கோன் ஆயினும் கடி வரை யின்றே

என்று தொல்காப்பியம் குறிப்பிட்டு சென்றுள்ளது (Sanmugam pillai, 1997).

அறம், பொருள், இன்பம் எனும் முப்பெரும் தன்மையுடன் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலப்பரப்புகளில் வாழும் மனித சமுதாயம் புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்னும் ஐவகை ஒழுக்கங்களில் அடிப்படையில் வாழும் போது அங்கு குடும்ப அமைப்பு கால்கொள்ளத் தொடங்குகிறது.

இலக்கிய மரபுப்படி களவு வாழ்க்கையானது குறிப்பிட்ட கால நீட்சியைக் கொண்டிருக்கும். களவு முற்றுப்பெற்ற நிலையில் தலைவியின் பெற்றோர் உறவினர் முதலானோர் தலைவனுக்கு மணம் முடித்துக் கொடுப்பர். கற்பு வாழ்வில் சிக்கல் தோன்றிய சூழல் அக்காலத்திலும் நிலவி வந்தது. களவு வாழ்வில் திளைத்த தலைவன் கற்பு வாழ்வைக் குறித்து சிந்திக்கும்போது தலைவியை மறந்தது போதலும், சில வேளைகளில் ஏமாற்றிவிடும் போக்கும் இருந்தமையால் சமுதாய நடைமுறை அமைப்பைச் சீர்செய்தல் வேண்டி திருமணம் என்னும் செயற்பாடு சான்றோரால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. இதனைப்

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்ற தொல்காப்பிய நூற்பா இச்செய்தியை எடுத்துரைக்கின்றது (Sanmugam pillai, 1997). இதன்வழி திருமணம் குறித்த வரையறையைச் சமுதாயம் உருவாக்கியது என்பதை உணரமுடிகின்றது.

## பெருங்கதையில் திருமணம்

பெருங்கதையில் காப்பிய நாயகன் உதயணன் நான்கு பெண்களை மணம் புரிகின்றான். இந்த மணங்களின் மூலம் கொங்குவேளிர் தமிழரின் திருமண முறைகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இங்கு உதயணன் வாசவதத்தையின் திருமணச் செய்திகள் மட்டும் இடம் பெற்றுள்ளன.

## உதயணன்-வாசவதத்தை திருமணம்

உதயணன்-வாசவதத்தை திருமணம் பெருங்கதை காப்பியத்தில் நிகழும் முதல் திருமணம் ஆதலால் 'கடிக்கம்பலை', 'கட்டிலேற்றியது', 'ஆறாம் திங்கள் உடன் மயிர்களைந்தது', 'மண்ணு

நீராட்டியது', 'தெய்வச்சிறப்பு', நகர்வலங் கொண்டது என்னும் ஆறு பிரிவுகளில் கொங்குவேளிர் விவரித்துக் கூறியுள்ளார்.

திருமணத்தின் முந்தைய நிகழ்வுகளாக,

"நன்னா ளிதுவெனப் பன்னா டறியப்

பசும்பொற் பலவார் விசிந்து பிணியுறீஇக்

கோதைமுத்தொடு தாமந் ததைஇ

ஏற்றுரி போர்த்த விடியுறழ் தழங்குரற்

கோற்றொழில் வேந்தன் கொற்ற முரசம்

பெரும்பணைக் கொட்டிலு ளரும்பலி யோச்சி

முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சித்

திருநாள் படைநாள் கடிநாளென்றிப்

பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்

செல்வச்சேனை வள்ளுவ முதுமகன்

நறுவெண் சாந்தொடு மாலை யணிந்து

மறுவில் வெண்டுகின் மருங்கணி பெறீஇ

அணைமிசை யமர்தந் தஞ்சுவரு வேழத்துப்

பணையெருத் தேற்றிப் பல்லவர் சூழத்

தேர்திரி மறுகுதோ றூர்முழு தறிய"

என்று கொங்குவேளிர் சுட்டியுள்ளார் (Swaminatha Iyer, 1996). இவற்றின் வழி திருமணத்திற்கு முந்தைய நிகழ்வுகளாக,

- கணியன் திருமணத்திற்கு ஏற்ற நாளும் கோளும் கணித்துத் தருகிறான்.
- வள்ளுவன் யானையின் பிடரியில் முரசை ஏற்றி நாட்டு மக்களுக்கு திருமணச் செய்தியை முறையாக அறிவிக்கின்றான்.
- திருமணச் செய்தி அறியும் நாட்டு மக்கள் பேருவுவகை எய்துகின்றனர்.
- மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் இல்லத் திருமண நிகழ்வு எனவே கருதி தங்கள் இல்லங்களை அழகுபடுத்துகின்றனர்.
- தெருக்கள் தூய்மை செய்யப்பட்டு புது மணல் பரப்பப்பட்டு உள்ளது.
- வீதியெங்கும் தோரணங்கள் நாட்டப்பெற்று அவை மலர்களாலும் பொன்னாலும் அணிசெய்யப்பட்டன.
- மணப்பந்தல் வெகுவாக அலங்கரிக்கப்பட்டது.
- உணவு சாலைகள் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டு வேறுபாடின்றி அனைவருக்கும் அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.
- வண்ணத் துணிகள் கண்ணாடிகளால் ஆன வேலைப்பாடுகள் கம்பங்கள் தோறும் இடம்பெற்றிருந்தன.
- வாழ்க்கையில் பின்பற்றுவதற்கு ஏற்ற சமணசமய ஒழுக்கலாறுகள், சமயசிறப்புகள் தக்க அறவோர்களால் நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன.

இவற்றின் மூலம் நம் தமிழர்களின் அறம் சார்ந்த உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## திருமண நிகழ்வுகள்

உதயணன் வாசவதத்தையின் திருமண நாளன்று

- வேள்வித்துறை முற்றிய மாமுது பார்ப்பான் மணப்பந்தலில் வெண்மணல் பரப்பி முக்குழி அமைத்துச் சமித்துகளை (தர்ப்பைப் புற்களை) இட்டு ஓமத்தீயை வளர்க்கிறான்.
- தோழியான காஞ்சனமாலை தன் தலைவியான வாசவதத்தையை அழைத்து வந்து மணமேடையில் உதயணன் பக்கத்தில் அமரச் செய்கிறாள்.
- மாமுது பார்ப்பான் மணமக்களைப் போகமும் கற்பு ஒருங்குகூடி நிலை பெற்று வாழ்க என கீழ்த்திசை நோக்கி வாழ்த்தினார்.
- உதயணன் வாசவதத்தையின் காலைப் பற்றி தூக்கி அம்மியின் மேல் வைக்கிறான். வானில் வடமீனாய்த் திகழும் அருந்ததியைக் காட்டுகின்றான்.
- மணமக்கள் நான்கு நாட்கள் சதுர்த்தி நோன்பு மேற்கொள்ளுகின்றனர்.
- மணச் சடங்குகள் நிறைவுற்ற நிலையில் மக்கள் பள்ளிக் கட்டில் ஏறுகின்றனர்.
- மங்கலநாண் அணிந்ததாய் க்குறிப்பு ஏதும் காணப்படவில்லை.
- ஆறு மாதங்கள் கழிந்த பின் மணமக்களுக்கு நாவிதன் மயிர் களைதல் என்னும் செயல் நடத்தப்படுகிறது.
- திருமண நிகழ்வுக்கு பிறகு சினதேவன் ஆலயம் வலம் வருதலையும் உதயணன் மேற்கொண்டான்.

பெருங்கதை திருமண நிகழ்வோடு,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினர் கொடுப்பக் கொள்வதுவே"

என்னும் தொல்காப்பிய நூற்பாவை இதனுடன் இணைத்துப் பார்க்கலாம் (Sanmugam pillai, 1997).

## பள்ளிக்கட்டிலேறியது

தமிழர்கள் திருமணத்திற்கு ஏற்ற நேரம் பார்த்தமைப் போன்றே முதலிரவிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். பெண்ணின் சுற்றத்தினர் 'பெரிய மனைக்கிழத்தி ஆவாயாக நீ' என்று அவளை வாழ்த்தி தலைவி தலைவனை புணர்ச்சிக் கூறிய ஒரு தனி அறையில் இருக்க செய்தனர் என்னும் செய்தியினை அகநானூறு,

"பேர்இற் கிழத்திஆக எனத் தமர்தர

ஓர்இற் வடிய உடன்புணர் கங்குல்

கொடும் புறம் வள இக் கோடிக்கலிங்கத்து

ஒடுங்கினள் கிடந்த ஓர்புறம்தழீஇ

முயங்கல் விருப்பொடு முகம் புதை திறப்ப

அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின்

நெஞ்சம் படர்ந்து எஞ்சாது உரை என

இன்நகை இருக்கை பின்யான் வினவலின்

செஞ்சூட்டு ஒண்குழை வண்காது துயல்வர

அகமலி உவகையள் ஆகி, முகன் இகுத்து

ஒய்யென இறைஞ்சி யோளே"

என்ற அடிகளில் வெளிப்படுத்தியுள்ளது (Venkataraman, 2009). இந்நிகழ்வினைப் போன்றே பெருங்கதையிலும் திருமண நிகழ்வின் நோக்கமாகிய பள்ளிக்கட்டில் ஏற்றிய நிகழ்வைக் கொங்குவேளிர் வெகுசிறப்பாக விவரித்துச் சொல்வதைக்,

"கண்ணார் குருசிலை கவின்பெற வேற்றிக்

தனைகமலர்த் தாரோன் றடக்கை பற்றியவள்

முகைமலர்க் கோதைமுடிமுதற்றீட்டிச்

செம் பொற்றால மலிரப் பெய்த

மங்கல வயினி மரபுளி யுறீஇ

ஒல்லென்சும்மையொடு பல்வளந் தரூஉம்

உருமண் ணுவாவின் பெருநமர் மாந்தர்

ஆசில் செங்கோ லவந்தயின் மடமகள்

வாசவதத்தையொடு வத்தவ ரிறைவனை

முட்டில் செல்வமொடு முறையிற் பிழையாது

கட்டி லேற் றினராற் கருதியது முடித்தென்"

என்ற அடிகளில் காணமுடிகிறது (Swaminatha Iyer, 1993).

## கணவன்-மனைவி உறவு

கணவன்- மனைவி இருவரும் சேர்ந்து வாழத் தொடங்கும் நிலையில் குடும்ப அமைப்பு உருவாகிறது. தனிமரம் தோப்பாகாது என்பது போல் தனி மனிதனுக்குச் சமுதாய அங்கீகாரம் கிட்ட வாய்ப்பில்லை எனலாம். தனி மனிதன் சமுதாய அமைப்பிற்குக் கட்டுப்பட்டு தனக்கென ஒரு குடும்ப வாழ்வை மேற்கொள்ளத் தொடங்கும்போதே அவனைச் சமுதாயம் ஓர் அங்கமாக ஏற்றுக் கொள்ள முனைகிறது. குடும்பத்தில் கணவன் மனைவி உறவுநிலைக்கு அன்பு அடிப்படையாகத் திகழ்கிறது. அவர்களது அன்பின் தூய்மையினை

"இம்மை மாறி மறுமை யாயினும்

நீயாகிய ரென் கணவனை

யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே"

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன (Swaminatha Iyer, 1993). மனைவியின் உயிராகக் கணவர்மதிக்கப்பட்ட தன்மையை,

"நல்லோள் கணவன் இவனெனப்

பல்லோர் கூற"

என்ற அடிகளின் வழி அறியமுடிகிறது (Swaminatha Iyer, 1993). உடல் மனம் இரண்டிலும் கணவன் மனைவி இருவரும் நிறைந்த அன்புடையவர்களாய் திகழ்ந்தால் குடும்ப வாழ்வு சிறப்பாக அமையும் என்பதை இவற்றின் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குடும்ப அமைப்பைப் பற்றி வெளிப்படுத்தும் இடங்களில் தலைவனும் தலைவியும் ஒருவருக்கு ஒருவர் இயைந்து வாழ்ந்த நிகழ்வினை பெருங்கதை காட்டியுள்ளது.

பிரச்சோதனன்தன் மகளான வாசவதத்தை உதயணனுடன் உடன்போக்கு நிகழ்த்தியதை அறிந்து ஒரு தந்தையாக சினம் கொள்கிறார். இதனை

"இகழ்ச்சி யளற்று ளிறங்கிற் றின்றெனச்
சுற்ற மாக்களைச் சுடுவான் போலப்
பொற்றார் மார்பன் பொங்குபு வெகுண்டு
முகைநகை முத்தொடு தகைமுடி தயங்க
அருவரை யகலத் தாரம் புறத்
திருமுடி யண்ண றீப்படச் சீறி
எழுவுறத் திணிதோ ளெடுத்தன னோச்சிப்
பொழிமணித் திண்டூண் பொறிபடக் புதைத்து"

என்ற அடிகளில் கொங்குவேளிர் வெளிப்படுத்தியுள்ளார் (Swaminatha Iyer, 1996). பிரச்சோதனன் தன் கோபத்தின் மிகுதியைத் தூணில் அறைந்து வெளிப்படுத்துகிறான். ஆனால் அவளது மனைவி பதுமகாரியை வாசவதத்தையின் உடன்போக்கிற்கு வருந்தும்போது பிரச்சோதனன் தன் வருத்தத்தை அடக்கிக்கொண்டு தன் மனைவியின் துயர் நீக்கும் முகமாக அவளை,

"முகை மலர் பைந்தார் குழைய முயங்கி
மடவை மன்ற மடவோய் மண்மிசை
உடைவயிற் பிரியா துறைநரு முளரோ
இற்றுங் கேண்மதி முற்றிழை மகளிர்
தத்துநீர் பெருங்கடற் சங்கு பொறையு யிர்த்த
நித்திலத் தன்னர் நினைந்தனை காணென
ஆர்வக் காதலன் காரணம் கட்டுரை
இகப்ப விடா அன் றெளிப்பத் தேறிக்
கயல்புரை கண்ணி யிகல்புகிளந் தேத்திப்
பொன்னணி நகரமொடு தம்மனை புலம்ப
வான்மதி இழந்த மீனினம் போலப்
பொலிவின் றாகிப் புல்லென் கோலமொடு
கலாவேற் காவலன்மடமகட் காணாது
விலாவித் தன்றால் விழவணி நகரென்"

என்றவாறு தேற்றுகிறான் (Swaminatha Iyer, 1996). இப்பாடலில் பிரச்சோதனன் தன் மனைவியிடம் தன் மகளான வாசவதத்தை உடன்போக்கு மேற்கொண்டது குறித்து வருத்தம் அடைய வேண்டாம் என்றும், பெண்ணாகப் பிறந்தவள் பிறந்த வீட்டிலேயே தொடர்ந்து வாழ்ந்திட இயலாது, என்றாவது ஒருநாள் தன் கணவனுடன் புகுந்த வீட்டிற்குச் செல்ல வேண்டியதிருக்கும் என்று ஆறுதல் கூறுகிறான். கடல் சிப்பியில் உருவாகும் முத்தினால் அச்சங்கிற்கு எந்தப் பயனும் கிடையாது. அம்முத்தை யார் எடுத்து அணிகிறார்களோ அவர்களுக்கே அப்பயன் கிட்டும் என்று கூறித்தேற்றுகிறார். இச்செய்திக்கு அடிப்படையாகக் கலித்தொகையில் இடம்பெற்றுள்ளது

"பல உறு நறும் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலை உளே பிறப்பினும் மலைக்கு அவை தாம் என் செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்கு ஆங்கு அனையளே

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை

நீர் உளே பறப்பினும் நீர்க்குஅவை தாம்என் செய்யும்

தேரும் கால் ஙம் மகள் நுமக்கு அங்கு அனையளே

ஏழ்புணர்இன்இசை முரல்பவர்க்கு அல்லதை

யாழ்உளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்

சூழும்கால்நும்மகள நுமக்கும் ஆங்கு அனையளே"

என்ற பாடலுடன் ஒப்பு நோக்கத்தக்கது (Avvai Duraisamy pillai, 2010).

தன் மகள் வாசகத்தை உதயணனனுடன் உடன்போக்கு மேற்கொண்டதை அறிந்து ஒரு தந்தையாக தன் மன வருத்தத்தை அடக்கிக்கொண்டு தன் மனைவியின் துயரினை நீக்குதல்தன் கடமை என உணர்ந்து செயல்படும் கணவனின் கடமை உணர்வு, அன்பு உணர்வு போன்றவிழுமியப் பண்புகளைக் கொங்குவேளிர் வெளிப்படுத்தக் காணலாம்.

## தந்தை - மகள் உறவு

உதயணனுடன் வாசவதத்தை வாழும் காலத்தில் உதயணனின் நண்பனும் அமைச்சருமான யூகியின் திட்டத்தினால் வாசவதத்தை அழல்வாய்பட்டு இறந்ததாக ஒரு பொய் செய்தி பரப்பப்படுகிறது. இச்செய்தியினால் உதயணன் கலங்கியது போன்று வாசவதத்தையின் தந்தை பிரச்சோதனனும் கலக்கம் கொள்கிறான். தன் கலக்கத்தினை நீக்கிக்கொள்ளும் முகமாக ஒரு முனிவரிடம் சென்று முகவாட்டமுடன் நிற்க, அவரும் நடந்ததை அறிந்து வாசவதத்தை மீண்டும் வருவாள் என்பது குறித்த அனைத்து செய்திகளையும் தெளிவாக எடுத்துரைத்து அவனது துயரினை நீக்குகிறார். இதனைப் பெருங்கதை,

"தொடுத்த மாலை யெடுத்தது போல

முறைமையின் முன்னே தெரிய வவனெம்

இறைமகற் குரைத்தன னித்துணை யளவவள்

மாய விருக்கைய ளாய்வ தாமென

நீட்ட மின்றவ ணீயள விடினே

கூட்ட மெய்து நாளு மிதுவென"

என்ற அடிகள் விளக்குகின்றன (Swaminatha Iyer, 1996).

இச்செயல் மூலம் தன் மகள் திருமணம் செய்து தன்னை விட்டு சென்று விட்டாலும் அவளது நலனில் அக்கறையும் விருப்பமும் கொண்ட ஒரு சிறந்த தந்தையாகப் பிரச்சோதனன் படைக்கப்பட்டிருக்கிறான் என்பது புலனாகிறது.

மந்தரவரசன் முக்தியை விரும்பி தன் மனைவியோடும், மகள் விரிசிகையோடும் கானகம் சென்று தவம் செய்தான். ஒருநாள் உதயணன் காடு வளம் காண வருகையில் சிறுமியான விரிசிகைக்கு மலர் மாலை தொடுத்துச் சூட்டும் சூழல் ஏற்படுகிறது. அதனையே தனது பற்றுக்கோடாகக் கொண்டு விரிசிகை உதயணனை விரும்பி மனதளவில் கணவனாக ஏற்று திருமணப் பருவம் வந்தவுடன் அவரை மணம் செய்ய விருப்பமுற்றவளாக இருக்கிறாள். இதனை அறிந்த அவளது தந்தை உதயணனிடம் வந்து என் மகளை அளிப்பேன் நீ பெற்றுக் கொள் என்று தெரிவிக்கின்றார். இச்செயல் மரபற்ற செயல் என்றாலும் இயல்பாகவே உன்னால் மாலை சூட்டப்பட்டவள் ஆதலின் அவள் உன் மனைவியை ஆவாள். ஆதலால் என் வேண்டுகோளின்படி செந்தீக் கடவுளின் முன்பு அவளை நல்ல நாளில் மணம் செய்து கொள்ளுதல் நன்று என்று மந்தரவரசன் கூறுவதாக

"............. வத்தவ

யாமகட் டருதுங் கொள்கெனக் கூறுதல்

ஏம வையத் தியல்பன் றாயினும்

வண்டார் தெரியல் வாண்முகளு சுடரப்

பண்டே யணிந்தநின் பத்தினி யாதலிற்

பயந்தனர் கொடுப்ப வியைந்தன ராகுதல்

முறையே யென்ப விறைவ வதனால்

யானே முன்னின் றடுப்ப நீயென்

தேனேர் கிளவியைத் திருநா ளமைத்துச்

செந்தீக் கடவுண் முந்தை யீரிஇ

எய்துத னன்றெனச் செய்தவ னுரைப்ப"

கொங்குவேளிர் அமைத்துள்ளார் (Swaminatha Iyer, 1996).

மந்தரவரசன் அரச முனிவனாக இருந்தாலும் தன் மகளான விரிசிகையின் நலனிலும் வாழ்விலும் விருப்பமும் அக்கறையும் கொண்ட ஒரு தந்தையாகச் செயல்படுவதன் வழி அவரின் கடமையும் அன்பும் கொண்ட விழுமியப் பண்பினை நாம் உணர முடிகின்றது.

## குழந்தைப்பேறு

குடும்பம் என்ற அமைப்பை முழுமையாக்குவதும் தலைவன் தலைவியின் இல்லற இணைப்பின் காரணியாகத் திகழ்வதும் குழந்தை பேறாகும். இதனையே புறநானூறு,

"படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்

உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி

இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்

நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்

பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே" (Avvai Duraisamy pillai, 1964).

என்றும்,

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்

சிறுகை அளாவிய கூழ்"

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்று அவர்

சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"

"குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்

மழலைச்சொல் கேளா தவர்"

என்று திருக்குறளும் மக்கள் செல்வத்தின் சிறப்பினை இயம்புகின்றன (Parimelalhagar, 1996).

உதயணன் வாசவத்தைக்குப் பிறக்கும் நரவாணதத்தனின் பிறப்பைச் சிறப்பித்துப் பேசிக் குழந்தைப்பேற்றின் இன்றியமையாமையைப் பெருங்கதை தெளிவுபடுத்துகிறது. பத்திராபதித் தெய்வத்தின் பரிந்துரையாலும் குபேரனின் அருளாலும், நரவாணதத்தன் பிறந்ததை,

"ஐவகைப் பூவும் பல்வகைபரப்ப

மதியுறழ் சங்க நிதியஞ் சொரிய

அந்தர விசும்பி னாழிக் கிழவன்

வந்துடன் பிறந்தனன்"

என்றவாறு கொங்குவேளிர் பதிவு செய்கிறார் (Swaminatha Iyer, 1996).

## பிறந்தநாள் சிறப்புகள்

பண்டைத் தமிழகத்தில் மன்னர்கள் தமதுபிறந்த நாளைக் கொண்டாடியுள்ளதைத் தொல்காப்பியத்தின்,

"சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்

பிறந்தநாள் வயின் பெருமங்கலமும்"

பெருமங்கலம் என்னும் பெயரால் மன்னன் பிறந்தநாள் அழைக்கப்பட்டுள்ளது (Sanmugam pillai, 1997).

அரச வாரிசு பிறந்த தினத்தை அரசன் கொண்டாடிய விதம் பற்றிபெருங்கதை மிகச் சிறப்பாக விவரித்து கூறியுள்ளது. நல்ல நிமித்தங்கள் நிறைந்த நன்னாளில் வாசவதத்தை ஆண்மகவினை ஈன்றாள். உதயணன் தனக்கு மகன் பிறந்ததால் மகிழ்ச்சியில் திளைத்தான். மகனது ஆயுள் நீட்சியுடன் விளங்க வேண்டும் என்பதற்காக எப்பொருளை வழங்க வேண்டும் என ஆராயாது பலவகை தானங்கள் செய்தான். கொலை குற்றவாளிகளையும், பிற குற்றவாளிகளையும் விடுதலை செய்வித்தான். நாடு கடத்தப்பட்டோர் மீண்டும் நம் நாட்டிற்கு வரலாம் என்றும் செய்தி அறிவித்தான். பகை அரசர்களும் வந்து என் மகனை வாழ்த்தி எனக்கு உறவினர் ஆகலாம் என்றும் அறிவித்தான். கோயில்கள் அனைத்திலும் திருவிழாக்களை நிகழ்த்தியும் சிறப்பு செய்வித்தமையைக் கொங்குவேளிர்,

"ஆயுட் டானம் தானம் யாவையென் னாது

மேயவை யெல்லாங் காவலன் வீசி

முத்துமணற் பரந்த நற்பெருங் கோயில்

முற்றந் தோறு முழங்கு மர சியம்பப்

........ ........ ........ ........ ........ ........

கொலைச்சிறை விடுக தளைச்சிறை போக்குக

கொற்றத் தானையொடு கோப்பிழைத் தொழுதிய

குற்ற மாந்தருங் கொடிநகர் புகுதுக"

என்றவாறு புலப்படுத்தியுள்ளார் (Swaminatha Iyer, 1996).

ஒரு தந்தையாக உதயணன் தன் குலம் தழைத்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியில் செய்யும் செயல்கள் அனைத்தும் அவனது சிறந்த பண்பினை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. தன் மகனின் ஆயுட்காலம் நீண்டதாக அமைய அனைவரின் வாழ்த்துகளும் வேண்டும் என்ற எண்ணம் கொண்ட ஒரு தந்தையின் மன நிலையும் இதன் மூலம் வெளிப்படுகிறது.

## சாதகர்மம் செய்தல்

அரண்மனையிலுள்ள கணிமாந்தர்களான பெருங்கணிகர்கள் உதயணனின் மகன் பிறந்த நேரத்தினைக் கொண்டு ஆராய்ந்தனர். குழந்தை பிறந்த நாளையும் அந்த தாய் ஈன்ற முழுத்தத்தினையும் அப்பொழுது சிறந்த நல்ல கோள்கள் உயர்ந்த இடத்தில் நின்று பெருமையுற்றதனையும் ஆராயத் தக்க சிறப்பினை உடைய பக்கக் கோள்களையும் தீய கோள்களின் தீமைகள் எவை எவை என்று பொருந்தி ஆராய்ந்து அரசன் அறியும்படி தவறின்றி எழுதிய சாதகப் பத்திரிக்கையை ஆயத்தப் படுத்தினர். இதனை,

“வழியோ ரறிய வழுவுத லின்றிச்

சாதகப் பட்டிகை சாலவை நாப்பண்

அரும்பொறி நெறியி னாற்ற வமைத்த

பெருங்கணிக்குழுவுக்குப் பெறுதற் கொத்த

ஈரெண் கிரிசை யியல்புளி நடாஅய்”

என்றவாறு பெருங்கதை கூறுகிறது (Swaminatha Iyer, 1996).

அறிவியல் முன்னேற்றம் நிரம்பிய இன்றைய உலகிலும் தங்களின் குழந்தைக்கு சாதகம் எழுதும் பழக்கம் உள்ளது என்பது இதனோடு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

## பரிசளித்தல்

அரசன் தன் அரண்மனையில் பணிபுரியும், அரசியல் நெறியை மேற்கொண்டு அரசனுடைய புகழை எடுத்து ஏத்துகின்ற தொழில் செய்வோருக்கும், விறலியருக்கும், அரண்மனை பணி மகளிருக்கும், வாயில் காக்கும் மறவருக்கும், பிழைப்படாதத் தொழிலை உடைய கணக்கமாந்தருக்கும், திணைமாந்தருக்கும், காவிதிப் பட்டம் பெற்றவருக்கும், ஆவணம் எழுதுவோருக்கும், அறவோருக்கும் இன்னின்னவை வழங்குதல் வேண்டும் என்று நூலோர் வகுத்துள்ள முறைப்படி அணிகலன்களையும் ஆடைகளையும் மணி, பொன் முதலியவற்றையும் தானமாக வழங்கினான். இதனை

“சிறப்பொடு புணரு மறப்பெருங் குழுவும்

ஏனோர் பிறர்க்குமிவையன வகுத்த

அணியு மாடையு மணியுநல்கித்”

என்ற அடிகளில் கொங்குவேளிர் விளக்குகிறார் (Swaminatha Iyer, 1996).

## உறவுகளுக்குச் செய்தியனுப்புதல்

ஒரு குடும்பத்தில் குழந்தைக்கு அடுத்தபடியாக ஊன்றுகோலாய் திகழ்பவர்கள் உறவினர்களே ஆவர். இதை உணர்ந்த உதயணன் தன் மகன் பிறந்த செய்தியைத் தனது தம்பிகளான பிங்கல, கடகருக்கும், மைத்துனராகிய தருசக மன்னனுக்கும், வாசவதத்தையின் தந்தையாகிய பிரச்சோதன மன்னனுக்கும், நண்பனும் அமைச்சருமான யூகிக்கும் தூதுவர் மூலம் செய்தி அனுப்பினான்.

உறவினர்கள் வாழ்த்தோடு பரிசுப் பொருள்களை நரவாணதத்தனுக்கு அனுப்பி வைத்தனர். குழந்தை பிறந்த அடுத்த பன்னிரண்டு நாட்களும் அறச் செயல்களைச் செய்து உதயணன் பயன் தரும் படி செய்தான் என்பதனை பெருங்கதை,

“தம்பியர் தமக்குந் தருசகன் றனக்கும்

நங்கையைப் பயந்த நலந்தகு சிறப்பின்

உரத்தகு தானைப் பிரச்சோ தனற்கும்

உவகை போக்கியூகியும் வருகெனத்

தவிர்வில் செல்வந் தலைவந் தீண்ட

ஆசான் முதலா வந்த ணாளரும்

மாசில் வேள்வி மகிழ்ந்தனர் தொடங்கி

ஏனை வகையின் மேனிலைதிரியாது

பன்னிருநாளும் பயத்தொடு கழிப்பி"

என்றவாறு குறிப்பிட்டுக் காட்டுகிறது (Swaminatha Iyer, 1996).

## பெயரிடல்

தமிழர் தம் பண்பாட்டு மரபின் சிறந்த அடையாளமாகப் பெயரிடல் எனும் பெயர் சூட்டு விழா நிகழ்வு சிறப்பாக போற்றப்பட்டு வந்துள்ளது. மனிதனின் தனித்த அடையாளமாகப் பெயர் விளங்குகிறது. தமிழர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பெயரிடும் போது தம் தந்தையின் பெயர், முன்னோர்களின் பெயர், குலதெய்வத்தின் பெயர் போன்றவற்றிக்கு முன்னுரிமை அளித்து உள்ளனர். நற்றிணையில் இச்செய்தி

"சீர்கெழு மடந்தை யீரிமை பொருந்த

நள்ளென் கங்குற்கள்வன் போல

அகன்றுறை யூரனும் வந்தனன்

சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே"

என்ற அடிகள் மூலம் சிறந்த தந்தையின் பெயரின் ஆகிய தன் மைந்தன் எனும் கூற்று புலனாகிறது (Venkataraman, 2009).

கோவலன் தன் மகளுக்கு 'மணிமேகலை' என்று தன் குலதெய்வத்தின் பெயரைச் சூட்டுவதைத்

"திரையிரும் பௌவத்துத் தெய்வமொன் றுண்டனக்

கோவலன் கூறியிக் கொடியிடை தன்னையென

நாமம் செய்த நன்னாள்"

என்ற மணிமேகலை அடிகள் வாயிலாக அறிய முடிகின்றது (Swaminatha Iyer, 1993).

உதயணன் தன் மகனின் பிறப்பின் தன்மையை ஆராய்ந்து மேனிலை உலகத்தின்கண் திகழும்

நகரில் பலராலும் புகழப்படும் குபேரனின் அருளால் பிறந்தவன் ஆதலால் நரவாணன்= குபேரன்; தத்தன்=வழங்கப்பட்டவன், "குபேரனால் வழங்கப்பட்டவன்" என்னும் பொருளில் "நரவாணதத்தன்" என்று பெயர் சூட்டியதாகக் கூறப்பட்டுள்ளது. பெருங்கதையின் ஐந்தாம்காண்டம் நரவாணதத்தனின் பெயரிலேயே நரவாண காண்டம் என்று அமைக்கப்பட்டுள்ளது. இதனை,

"பெயர்நிலை பெறீஇய பெற்றிநாடி

உயர்நிலை யுலகி னுலோக பாலன்

நயமிகு சிறப்பொடு நகர்மிசைப் பொலிந்த

பலர்புகழ் செல்வன் றந்தன னாதலின்

உருவாண மாகிய வோங்குபுகழ்ச் செல்வன்

நரவாண தத்த னென்றுபெயர் போக்கி"

என்ற அடிகளில் கொங்குவேளிர் விளக்குகிறார் (Swaminatha Iyer, 1996).

## பிரச்சோதனன் பெயரனுக்கு விழா எடுத்தல்

குழந்தைப்பேறு என்பது ஒவ்வொரு தம்பதியினரின் எதிர்பார்ப்பு. அதனினும் சிறந்த மகிழ்வு தன் மகளின் அல்லது மகனின் குழந்தையைக் காணும் தாத்தாவின் மனநிலை மகிழ்ச்சியின் உச்சம் எனலாம். இதனைப் பெருங்கதை பிரச்சோதனன் வாயிலாக உணர்த்துகிறது.

நரவாணதத்தன் பிறந்த செய்தியை உதயணனின் தூதுவன் பிரச்சோதனனுக்குத் தெரிவித்தான். உவகை மிகுதியால் அத்தூதுவனுக்கு பதினாறாயிரம் காணிகள் அடங்கிய கழனிகளையுடைய நகரங்களையும் அவனது வறுமை நிரந்தரமாக நீங்கும் அளவுக்குத் தலைபேரணிகலம் என்ற ஒருவகை அணியையும் கொடுத்தான்.

வள்ளுவமுதியவன் மூலம் இவ்வின்பச் செய்தியை நாடெங்கும் பரப்பச் செய்தான். வறுமையுடையோர் எவர் வந்தாலும் வறுமை நீங்கும் படி 'மாசை' எனும் பொற்காசினை வேண்டும் அளவிற்குக் கொடுக்க ஆணையிட்டான். தன் உறவினர்கள் மற்றும் குறுநில மன்னர்களுக்கு எல்லாம் இவ்வின்பச் செய்தியை அனுப்பி வைத்தான். இதனை,

"ஆய்படை வேந்தற் கரும்பெறற் றிருமகள்

வாசவ தத்தை தீதில் சிறப்பொடு

புத்திரற் பெற்றனள் பொலிவு முந்துறீஇ

மொய்த்த மாநகர் முறைமுறை வருகென"

என்ற பாடலடி எடுத்துரைக்கிறது (Swaminatha Iyer, 1996).

இந்திரனுடைய மேனிலை உலகம் நிலத்தின் மேல் வந்து வீழ்ந்து கிடக்கிறது என்று காண்போர் எண்ணும் வண்ணம் நகரினை அலங்காரம் செய்வித்தான். பல தான தருமங்களைச் செய்து பெயரன் பிறந்தமைக்காக விழா கொண்டாடினான்.

தன் இசைவின்றி உடன்போக்கு சென்று வாசவதத்தை திருமணம் செய்த போது மிகவும் சினம் கொண்ட பிரச்சோதனன் அவளுக்கு ஆண் குழந்தை பிறந்த செய்தியை அறிந்ததும் மனநிறைவு கொண்டு நிற்கிறான். நாட்டிற்கு அரசனே ஆனாலும் வீட்டிற்கு தான் ஒரு தந்தை தான் என்ற பிரச்சோதனனின் மன உணர்வினை இந்நிகழ்வின் வழி உணர முடிகிறது. இன்றும் இவ்வாறே விட்டுக்கொடுத்து உறவுகளை ஏற்றுக்கொள்ளும் விழுமியப்பண்பு நடைமுறையில் இருப்பதை இதனுடன் இணைத்து நோக்கலாம்.

## குழந்தை வளர்ப்பு

உதயணன் தன் மகன் நரவாணதத்தனைச் சிறப்பான ஆரோக்கியமான உடல் நலம் கொண்டவனாக வளர்க்க விரும்பினான். ஒரு தந்தையாக உதயணனும், தாயாக வாசவதத்தையும் குழந்தையைக் கவனித்துக் கொண்டாலும் குழந்தை வளர்ப்பு நெறிமுறை நூல்கள் பல கற்றறிந்த குழந்தை மருத்துவர்களையும் நியமனம் செய்தான். இதனை,

"யாப்புடை மகன் வயிற்காப்புடன் புரிகென

வதியறி மகளிரொடு மதிபல நவின்ற

மருந்துவகுப் பாளரைப் புரந்துறப் பணித்துத்

தளர்வி லூக்கந் தலைத்தலை சிறப்ப

வளரு மாதோ வைகறொறும் பொலிந்தென்"

என்ற பெருங்கதை வரிகள் புலப்படுத்துகின்றன (Swaminatha Iyer, 1996). இத்தகு மருத்துவ தொழிலாளர்கள் பலரையும் கொண்டு தளர்தல் இல்லாத ஊக்கமுடையவனாகத் தம் மகனை உதயணன் பொலிவுற வளர்த்தான்.

தன்னுடைய குழந்தைப் பருவத்தில் தன் தந்தையுடன் வாழ இயலாத உதயணன் தன் குழந்தைக்கு இத்தகைய நிலை வந்துவடக்கூடாது என்று நினைத்திருக்கவும் இச்செயல் வாய்ப்பளிக்கிறது. தன் குழந்தையைப் பேணுவதன் மூலம் ஒவ்வொரு தந்தையும் தன் குடியின் வளர்ச்சியைப் பேணுகிறான் என்பதை அறிந்திருந்த உதயணன் ஒரு சிறந்த தந்தையாக சிறப்பான முறையில்தன் குழந்தைக்கான கடமைகளை ஆற்றியுள்ளான் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

இன்றைக்கும் நம்முடைய வாழ்வில் தான் சிறுவயது முதல் பல இன்னல்களுடன் வாழ்ந்து உயர் நிலைக்கு வந்த தந்தையர்கள் அவர்களது குழந்தைகளை வாழ்வின் கடினத் தன்மை தெரியாமல் மகிழ்வுடன் வாழ வைக்கும் விழுமியப்பண்பு இதனோடு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

## முடிவுரை

சமுதாயத்தில் தொன்று தொட்டு இன்று வரை ஆணும் பெண்ணும் குடும்ப வாழ்வில் இணைந்து பின்பற்றப்படும் பல்வேறு குடும்ப விழுமியங்கள் மானுடம் தழைத்தோங்க அடிப்படையாக அமைகின்றன. அகத்தில் தொடங்கும் தமிழரின் களவு வாழ்வுஆகூழ் காரணமாக அமையும். குடும்ப அமைப்பானது அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருள் தன்மையுடன் ஐவகை நிலங்களின் அடிப்படையில் கால் கொள்ளத் தொடங்கியது என்பது அறியப்பட்டுள்ளது. கற்பு வாழ்வினைத் தொடங்க பெற்றோர் அனுமதிக்காத போது உடன்போக்கு என்னும் நிகழ்வு தலைவன் தலைவியரால் நிகழ்த்தப்பட்டது. இது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதையும் அறியமுடிகிறது. குடும்ப அமைப்பில் தலைவன் தலைவி இருவரும் ஒருவருக்கு ஒருவர் கருத்து ஒருமித்து மாறாக் காதலுடன் திகழ்ந்த விழுமியப்பண்பு விவரிக்கப்பட்டுள்ளது. தமிழ் மரபுப்படி விரிசிகை தன் தலையில் மலர்ப் பிணையல் சூடியவனே தன் கணவனாக வேண்டும் என்று சிறு வயது முதல் ஆழமாக எண்ணம் கொண்டு உதயணனை மணம் செய்யும் தன்மை விவரிக்கப்பட்டுள்ளது. களவில் தொடங்கும் மணங்கள் கற்பு மணமாக மாறும் போது திருமணம் அவசியமாகிறது. திருமணத்திற்கு நல்ல நாள் பார்த்தல், முரசறைந்து திருமணச் செய்தியினை நகரத்தார்க்கு அறிவித்தல், நகர் தூய்மை, நகர்அலங்காரம், திருமண முறைகள் சடங்குகள் போன்றவை விளக்கப்பட்டுள்ளது. குடும்ப அமைப்பில் தலைவியின் துயரினைத் தலைவன் நீக்க முற்படுதல் வேண்டும்என்ற குடும்ப விழுமிய பண்பு பிரச்சோதனன் பதுமகாரிகை மூலம் புலப்படுத்தப்பட்டுள்ளது. அரசனாக இருந்தாலும் முனிவனாக இருந்தாலும் தந்தை என்ற முறையில் தன் மகளின் காதல் உறுதியினை ஏற்றுக்கொள்ளும் தன்மையும் மகளுக்கு உறுதுணையாகச் செயல்படும் நிலையும் பிரச்சோதனன், மந்தரவரசன் மூலம் விளக்கப்பட்டுள்ளது. குலவளர்ச்சி என்ற சிறப்பு தன்மைக்காக தெய்வத்தை வேண்டி குழந்தைப் பேற்றினைப்பெற்ற செய்தி இடம்பெற்றுள்ளது. குழந்தை பிறந்தவுடன் மகிழ்வுற்ற பெற்றோர் உறவுகளுக்குச் செய்தி அனுப்புதல், விருந்து கொடுத்தல், சாதகம் கணித்தல், குழந்தையின் ஆயுள் வேண்டி தானம் தருதல் போன்றநிகழ்வுகளைச்செயல்படுத்தி உள்ளனர். குழந்தைக்குப் பெயரிடும் நிகழ்வு மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது. குழந்தைக்கானப் பெயரினைத் தக்க காரணத்தோடு சூட்டிய விழுமியப்பண்பினை அறிய முடிகிறது. மகள் வழிப் பெயரன் பிறப்புக்குப் பிரச்சோதனன் விழா எடுத்ததன் மூலம் பெண்களின் மீது பெற்றோர் கொண்டிருந்த பாச உணர்வு அவர்களுக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பெருங்கதை காப்பியத்தின் திருமண முறைகள் அவற்றின் வழி உணர்த்தப்பட்ட அறச்செய்திகள், கணவன்-மனைவி, தந்தை-மகள் உறவு நிலைகள், குடும்ப அமைப்பில் பிற உறவிற்கு முக்கியத்துவம் தருதல் குடும்பத்தின் முக்கிய நிகழ்வுகளில் உறவுகளை அழைத்து மகிழ்தல் என்பன போன்ற பல குடும்ப விழுமியப்பண்புகள் விளக்கப்பட்டுள்ளன.

## References

Avvai Duraisamy Pillai, S., (1964) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Avvai Duraisamy Pillai, S., (2010) Natrinnai Moolamum Velakauraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (1986) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Sanmugam Pillai, M., (1997) Tolkappiyam, Mulai Nilaiyam, Chennai, India.

Swaminatha Iyer, U.Ve., (1993) Kurunthogai Moolamum Uraiyum, U.V.SA. Library, Chennai, India.

Swaminatha Iyer, U.Ve., (1996) Perunkadhai Moolamum Kurippum, U.V.SA. Library, Chennai, India.

Venkataraman, K.G., (2009) Agananooru Moolamum Velakauraiyum, U.V.SA. Library, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License